DEPOSITION OF WITNESS

IN THE COURT OF PRINCIPAL LABOUR COURT, COIMBATORE.

ID 72/2022

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS | MW2 |
| NAME | M. வேலுசாமி |
| FATHER NAME | திரு. P. முருகேசன் |
| ADDRESS | 70/5, Imperial Enclave, Info college road, கோவில் பாளையம், SS குளம், கோயம்புத்தூர். |
| AGE | 35 |

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

Date.06.03.2026

**முதல் விசாரணை –**

நான் இவ்வழக்கின் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் எனது எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதனை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ்கண்ட ஆவணங்களை எனது வழக்கு தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு எதிர்மனுதாரர் நிறுவனம் அளித்த அங்கீகார கடிதம் Ex M27.

குறுக்கு விசாரணை

மனுதாரர் விடுப்பு கேட்டு என்னிடம் எந்த விண்ணப்பமும் அளிக்கவில்லை என்றால் சரிதான். மனுதாரரின் மனைவி விடுப்பு கேட்டு தொலைபேசியில் பேசிய விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரரை குற்றவியல் வழக்கில் கைது செய்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 06.07.2021 அன்று தொழிலாளர்கள் தொழிற்சாலைக்குள் பேசி கொண்டிருந்தார்கள். அப்போது எனக்கு தெரியும். 07.07.2021 அன்று மனுதாரரிடம் மனைவியிடம் பேசிய போது மனுதாரர் ஏற்கனவே குற்றவியல் வழக்கில் கைது செய்யப்பட்ட நிலையில் பொய் காரணங்களை கூறி விடுப்பு கோருகீறிர்கள் என்று கேள்வி எழுப்பினேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் Ex M17 ஆவணம் தான் எதிர்மனுதாரரிடம் கொடுத்த புகார் என்றால் சரிதான். அதில் மனுதாரர் குற்றவியல் வழக்கில் கைது செய்த விவரம் எனக்கு தெரியும் என்றும், அதனை அவரது மனைவி மறைத்து பொய் காரணங்களை தெரிவித்தார் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மனுதாரர்ர மீது குற்றவியல் வழக்கு பற்றிய விவரங்களை காவல் நிலையத்தில் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. குற்றவியல் வழக்கில் கைது செய்யப்பட்ட நபரால் வேலைக்கு வர முடியாது என்றால் சரிதான். மனுதாரர் விரும்பினாலும் பணிக்கு வர இயலாது என்றாலும் நீதிமன்ற உத்தரவில் ஜாமீன் பெற்றபிறகு தான் வேலைக்கு வர முடியும் என்றால் சரிதான். மனுதாரர் தன்னிச்சையாக absent ஆகவில்லை என்றும் குற்றவியல் வழக்கில் கைது செய்யப்பட்டதால் தான் வேலைக்கு வரவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டு

நீதிமன்றத்தின் நடைமுறைகள் அனைத்தும் முடிக்கப்பட்ட பின்பு தனக்கு மீண்டும் பணி வழங்க கோரி மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தை அணுகினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீண்டும் மனுதாரரை 17.08.2021 அன்று பணியமர்த்தி கொண்டோம் என்றால் சரிதான். மனுதாரர் வேலைக்கு வராத சமயத்தில் வேறு தொழிலாளர்களை வைத்து உற்பத்தி பணிகளை நிறைவு செய்து கொண்டோம் என்றால் சரிதான். வேறு இயந்திரத்தில் பணிப்புரிந்த operator யை மாற்றி உற்பத்தி பணிகளை மேற்கொண்டோம். Ex M17 ஆவணத்தை நான் எப்போது எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு வழங்கினேன் என்றும், அதை எதிர்மனுதாரர் நிறுவனம் எப்போது பெற்று கொண்டார்கள் என்ற விவரம் அதில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் மனிதவள மேம்பாட்டுத் துறை அதிகாரி கையொப்பம் செய்திருந்தார். Ex M17 ஆவணத்தில் அந்த மாதிரியான கையொப்பம் எதுவும் இல்லை என்றால் சரிதான். Ex M17 ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 06.07.2021 தேதியில் மனுதாரர் விடுப்பு அனுமதித்தோமா என்றால் அனுமதித்தோம். பின்னர் தகவல் தெரிந்து அதனை நிராகரித்தோம். மனுதாரர் பொய் காரணங்களை தெரிவித்து விடுப்பு கேட்டார் என்றும், அவரை உடனடியாக பணியில் சேர சொல்லி கடிதம் எதுவும் அனுப்பினோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. Ex M18 ஆவணத்தில் 06.07.2021 தேதியில் absent என்று தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் பொய் காரணங்களை சொல்லி விடுப்பு கோர

வில்லை என்றும், எதிர்மனுதாரர் நிறுவனம் தான் மனுதாரர் மீது பொய் குற்றசாட்டுகளை கூறுகிறோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.